ஆகவே, குறைந்த நிதியை வைத்துக் கூட இந்தக் கட்டிடத்தைக் கட்டலாம். ஆகவே, இதனுடைய பயன் கருதி அமைச்சர் அவர்கள் புதிய கட்டிடம் கட்ட ஆணை இடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சேர்ப்பதற்கு நிச்சயமாக வாய்ப்பு இல்லை. காரணம் ஏற்கெனவே டிமாண்ட் எல்லாம் முடிந்திருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டிலேதான் இதைப்பற்றி யோசிக்க முடியும். மேல் மாடி கட்டுவதற்குக் கூட குறைவாகச் செலவாகும் என்றாலும் குறைந்த நிதிக்கே கூட நமக்கு இப்போது பணத்தை ஒதுக்க முடியாத நிலை இருக்கிறது என்ற காரணத்தினால்தான் அதைக் குறிப்பிட்டேன். எனவே, அதுபற்றி எதிர்காலத்தில் ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 225, திரு. ஓ.எஸ். அமர்நாத், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

225--

மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி அமைத்தல்

**23393- திரு. ஓ.எஸ். அமர்நாத்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

மதுரை மாநகரில் பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள எல்லா முக்கியமான நகரங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கு இணையாக மருத்துவக் கல்லூரியில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி இயங்கி வருகிறது. தமிழகத்திலே உள்ள அனைத்து மக்களும் பல் மருத்துவப் படிப்பு படிக்க சென்னையில்தான் வந்து படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் நம்முடை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மதுரை வாழ் மக்களுக்கு பல் மருத்துவப் படிப்பிலே முக்கியத்துவம் கொடுக்கிற வகையிலே-இங்கே சென்னையில் டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வடுகன்குளம் போன்ற இடங்களில் தனியார் பல் மருத்துவக் கல்லூரிகள்

உள்ளன. அதைப்போன்று மதுரையில் தனியார் மூலமாக அரசு பல் மருத்துவக் கல்லூரி தொடங்க திட்டமுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மூலமாக தற்போது பல் மருத்துவக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்தில் பல் மருத்துவக் கல்லூரி அமைய வேண்டுமென்றால் மருத்துவர் சங்கத்திலிருந்து ஏதேனும் கோரிக்கை வரவேண்டுமா? அல்லது பொது மக்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கை வரப் பெறவேண்டுமா? அப்படி மருத்துவர் சங்கத்திலிருந்தும், பொது மக்களிடமிருந்தும் கோரிக்கை வரப் பெற்றால் அதை உடனே கவனித்து தனியார் மூலமாக பல் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா? அதற்கு என்னென்ன சாத்தியக்கூறுகள் தேவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மூலமாக கல்லூரி அமைப்பதற்கு இப்போது நம்மிடத்தில் நிதிவசதி இல்லை. தனியார் மூலமாக அனுமதிப்பதற்கு உத்தேசம் இல்லை. காரணம் ஏற்கெனவே ஆறு தனியார் பல் மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. எனவே, அந்த வகையில் அரசினுடைய சார்பாக நாம் ஒன்றை நடத்திக்கொண்டிருக்கிறோம். எனவே, இப்போது இதுவே போதும் என்ற ஒரு முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது. எனவே, இப்போது அதுபற்றி யோசிக்க முடியாது. எதிர்காலத்தில் தேவைகள் இருக்குமென்ற நிலை ஏற்படுமானால் அன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக ஆரம்பிக்கப்படுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்யலாமே ஒழிய, இப்போது நிச்சயமாக அதற்கு வாய்ப்பு இல்லை. தனியாருக்குக் கொடுக்கிற உத்தேசம், பாலிசியாக இப்போது நாங்கள் நிறுத்தி வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் யோசனை மதுரை மாநகரத்திற்கு முக்கியமாக இருக்கின்றது. வளர்ந்து வருகின்ற நகரம், கிட்டத்தட்ட 6, 7 மாவட்டங்கள் வலம் வந்து கொண்டிருக்கிற நகரம். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, பல் மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துகின்ற

சாத்தியக் கூறுகளை, தனியார் துறையிலோ அல்லது அரசுத் துறையிலோ, அரசுத் துறையிலே செய்வதற்கு நிதி ஆதாரம் இல்லை என்று சொன்னாலும் கூட,-வருங்காலத்திலேயாவது, இதை அமைப்பதற்குண்டான உத்தியை அரசு கையாளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே முடியாது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தனியார் துறைக்குக் கொடுப்பதா, அரசுத் துறைக்குக் கொடுப்பதா என்ற மொத்த கொள்கை ரீதியாகப் பார்க்கிறபோது, இப்போது ஏற்கெனவே அரசுக் கல்லூரிகளையும் சேர்த்து 7 கல்லூரிகள் இருக்கின்றன. எனவே, இது இப்போது போதும் என்ற நிலை இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கம் ஆய்வு செய்துதான் இந்த முடிவை எடுத்திருக்கிறது. எனவே, வருங்காலத்திலே இன்னும் பல் மருத்துவர்கள் அதிகமாகத் தேவை, இதற்கு மேலேயும் அவசியம் என்று கருதினால், அதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் தமிழக மக்கள் நலனைக் கருதியும், World Oral Health Year என்ற ஒரு முக்கியத்துவத்தையும் அறிந்துள்ள நமது அரசு மதுரை மருத்துவக் கல்லூரியிலே, அங்கேயுள்ள கட்டிடத்தில் ஒரு பகுதியைப் பிரித்து, அங்கே நவீனக் கருவிகளைக் கொண்டு பல் மருத்துவப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி அமைப்பதுதான் கடினம் என்று சொன்னேன். அதற்குத் தனியாக ஒரு பிரிவு வேண்டும் என்று சொன்னால், அதைப்பற்றி வருகிற ஆண்டிலே ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பல் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடம் நிரப்பப்படாமல் உள்ளதால், பட்டதாரிகள் தனியார் மருத்துவக் கல்லூரிக்குச் செல்வது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அவ்வாறு இருப்பின், அரசு அதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மூன்று ஆண்டுகாலத்திற்கு முன்பு அப்படிப்பட்ட நிலை இருந்தது. காரணம் எம்.பி.பி.எஸ்.சிறகாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களே-எம்.பி.பி.எஸ்.-சிலே ஏறத்தாழ 1072 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பல் மருத்துவக் கல்லூரியிலே 45 பேர்கள் சேர்க்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள் எனவே, அப்படி எடுக்கிறபோது, முதல் மாணவனாக எம்.பி.பி.எஸ்.-க்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற மாணவனே பி.டி.எஸ்-க்கும் தேர்ந்தெடுக்கிற ஒரு நிலை இருந்தது. எனவே, 1072 பேர்களையும் ஒவ்வொருவராக அவர்களுக்கு ஆர்டர் கொடுத்து வந்து அவர்கள் சேருகிறார்களா, இல்லையா என்று பார்த்து கடைசியில்தான் உண்மையாக வந்து சேரக்கூடியவர்களுக்கே ஆர்டர் போய்க் கிடைக்கிற நிலை இருந்தது. இப்போது அந்த நிலையை நாங்கள் மாற்றி இருக்கிறோம். இப்போது அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு இருக்கிறது. எனவே, ஓரளவிற்கு பிரச்சினை இல்லாமல் அத்தனை இடங்களையும் நிரப்புவதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அந்த 45 இடம் கூட 60-ஆக உயர்த்தப்பட்டு, மீண்டும் 80 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 226, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

226--

அவினாசி தொகுதியில் சேரன் போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்டுதல்

***21521- டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவினாசி தொகுதியில் சேரன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பணிமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அவினாசி தொகுதியில் உள்ள அன்னூரில் சேரன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பணிமனை ஒன்று அமைத்திட